# தென்கிழக்காசியாவில்
# ஸ்ரீ இராமர்கோயில்

ஜி.வமீகநாதன்
கட்டிடக் கலைஞர், ஸ்தபதி,
மஹாபலிபுரம் - தமிழ்நாடு

ஆலயம் என்பதை ஆ + லயம் என்று பிரிக்கலாம். 'ஆ' என்பது ஆன்மா என்றும் லயம் என்பதற்குசேருவதற்குரிய இடம் என்றும் பொருள். ஆகவே, கடவுள் திருவடியில் ஆன்மா இலயித்திருப்பதற்குரிய 'இடம்' எனப் பொருள்.

ஆலயத்தைகோயில் என்றும் சொல்வது மரபு. கோ + இல் கோயில். 'கோ' என்பது கடவுல் என்றும் 'இல்' என்பது தங்குமிடம் எனவும் பொருள். ஆகவே, கடவுள் நிலைத்திருக்கக்கூடிய இடத்திற்கு கோயில் என்று பெயர்.

பொதுவாக ஆலய அமைப்பில், கருவறை (கற்பக்கிரஹம்) அந்தராளம், அர்த்த மண்டபம் (முகமண்டபம்), நிருத்த மண்டபம் (நடனமண்டபம்), விருஷப மண்டபம், பிரகாரம், வாகனம், பலிபீடம், கொடிமரம், பரிவார ஆலயம் (சிறு கோயில்கள்),கோபுரம், திருக்குளம், திருமதில் ஆகிய அங்கங்கள் அமையப் பெற்றதாக இருக்கும்.

கோயில்கள் நமது உடம்பின் வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது மனித உடம்பில் உள்ள பாதங்கள் கோபுரமாகவும், முழங்கால் ஆஸ்தான மண்டபமாகவும், துடை நிருத்தமண்டபமாகவும், தொப்புள் பலிபீடமாகவும் மார்பு மகா மண்டபமாகவும், கழுத்து அர்த்த மண்டபமாகவும், சிரசு தலை கற்பக்கிரஹமாகவும் அமையப் பெற்றுள்ளது.

கருவறை

இக்கருவறையை மூலஸ்தானம் என்றும் கற்பக்கிரஹம் என்றும் சொல்வதுண்டு. இறைவன் எழுந்தருளியுளியிருக்கும் இடத்திற்கு கருவறை என்று பெயர். கருவறையை சதுரமாகவும், நீண்ட சதுரமாகவும், 8 பட்டமாகவும், 6 பட்டமாகவும், விருத்தமாகவும் (வட்டவடிவத்துடன்) அமைக்கலாம்.

இக்கற்பக்கிரஹத்தில் அடங்கும் உறுப்புகள் முறையே உபபீடம், அதிஷ்டானம், பாதம், பிரஸ்தரம். விமானம் என்ற அலங்கார உருப்புகள் அமையப் பெற்றதாகும். கருவறையின் உற்புரத்தில் அமையும்மூல விக்ரஹத்தை பதவின்யாச முறைப்படி பிரதிஷ்டை செய்தல் வேண்டும். அதாவது விநாயகராக இருப்பின் நான்காவது பதத்திலும் மற்றும் சிவன், பிரம்மா, விஷ்ணு போன்ற கடவுள்களின் அவரவர்களுகுரிய பதத்தில் அமையப் பெறுதல் நன்று.

அந்தராளம்

கருவறையையும், அர்த்த மண்டபத்தையும் (முகமண்டபம்) இணைக்கும் பகுதிக்கு அந்தராளம் என்று பெயர்.

**அர்த்தமண்டபம்**

அந்தராளத்திற்கு அடுத்து அமையும் மண்டபம் அர்த்த மண்டபம் என்று பெயர். குறிப்பாக இம்மண்டபம் இறைவனிடம் அருகில் சென்று வணங்குவதற்காவே அமைக்கப்பட்ட மண்டபம் என்று கூறலாம் இம் மண்டபமானது கருவறையின் அளவில் அடிப்படையாகக் கொண்டு இதனையே முன் மண்டபம் என்றும் கூறுவதுண்டு.

***சாவகாசா அந்தராளம்***

முக மண்டபத்தையும், மகா மண்டபத்தையும் இணைக்கும் பகுதிக்கு சாவகாச அந்தராளம் என்பர். இத்தகைய சாவகாச அந்தராளத்தில் வாயில் அமைப்பதும் உண்டு.

***மகாமண்டபம்***

முக மண்டபத்திற்கு அடுத்து அமைவது மகா மண்டபம் ஆகும். இம்மண்டபத்திற்கு அடுத்தாபோல் நிருத்த மண்டபம்,சோபன மண்டபம், வாகன மண்டபம் போன்ற மண்டபங்கள் அமைப்பதுண்டு. கோயில்களில் அமையும் இம் மண்டபத்தில் பல வகைகள் உண்டு. நான்கு கால் மண்டபம், எட்டு கால் மண்டபம், 16 கால் மண்டபம், 1000ம் கால் மண்டபம், வசந்தகால மண்டபம், கும்பதூண்களைக் கொண்டும், அமைப்பதுண்டு.

இம்மண்டபங்களில் உபபீடம், அதிஷ்டானம், பாதம், பிரஸ்பரம் என்ற அலங்கார உருப்புகள் மிகவும் அழகுடன் அமைக்கப் படும். பாதம் என்ற சொல்லப் படும் தூண்களில் மிக அழகிய வேலைப்பாடுகள் கொண்டதாக அமையும்.

பரிவாரக் கோயில்களீ

பிரகாரத்தில் அமைக்கப்படும் சிறுகோயில்களுக்குப் பரிவாரக்கோயில்கள் என்று பெயர். அதாவது மூலமூர்த்திக்கு ஏற்ற உருவங்கள் அமைப்பதுண்டு.

பிரகாரம்

கருவறையைச் சுற்றி வலம் வரும் இடத்திற்கு பிராகாரம் என்று பெயர். இப்பிரகாரத்தையே ஏழு பிரகாரமாக செய்வது உண்டு. இத்தகைய பிரகாரங்களில் கோபுரங்கள் அமையப் பெறும். ஒவ்வொரு பிரகாரத்திற்கும் ஒவ்வொரு பெயரும் முறைப்படிகூறியுள்ளார்கள்.

முதற்பிரகாரம் அந்தர் மண்டபம் என்றும், இரண்டாம் பிரகாரம் அந்தாஹாரை மூன்றாம் பிரகாரம் மத் ஹாரை, நான்காம் பிரகாரம் பாஷ்யஹாரை, ஐந்தாம் பிரகாரம் மர்யாதா, ஆறாம் பிரகாரம் மஹாமர்யாதா, ஏழாம் பிரகாரம் பிரவேசம் என்றும் ஆலயத்துள் அமையும். இத்தகைய பிரகாரத்தில் பரிவார மூர்த்திகளையும் மண்டபங்கள்போன்றவைகளையும் அமைப்பதுண்டு. பிரகாரங்களை கருவறை அலவினை அடிப்படையிலும், பதவியாச அடிப்படையிலும் அமைப்பது மரபு.

வாகனம் மூலமூர்த்திக்கு ஏற்ற வாகனங்கள் அமைப்பதுண்டு. விஷ்ணு கோயிலாக இருப்பின் கருடனையும். சைவன்கோயிலாக இருப்பின் ரிஷபத்தையும், சக்திக் கோயிலாக இருப்பின் சிம்மத்தையும் மற்றும் விநாயகர் கோயிலாக இருப்பின் மூஷிகத்தையும் மேலும் சுப்பிரமணியர் கோயிலுக்கு மயிலையும் அமைப்பதுண்டு.

பலிபீடம்

வாகனத்திற்கு அடுத்ததாக அமைக்கப்படுவது பலிபீடம் ஆகும். இப்பலிபீடத்தை தீபலிநாதர் என கூறுவதுண்டு. இப்ப்லிபீடத்திற்கு உபபீடம் அதிஷ்டானம் போன்ற அழகிய வர்க்கங்களை அமைத்து அதன்மேல் பலிபீடத்தை நிர்மாணித்தல் வேண்டும்.

கொடிமரம்

மரத்தின் அடிப்பாகத்தை கருங்கற்களைக் கொண்டு உறுதி செய்தல் வேண்டும். கொடிமரம் சந்தனம்,தேவதாரு, வில்வம், மகிழம் போன்ற மரங்களால் செய்வது உத்தமம். கொடி மரத்தை அமைப்பதன் நோக்கம் அசுரர்களை அகற்றுவதன் பொருட்டும், தேவர்களை அழைப்பதன் பொருட்டும் கோயில்களை காப்பாற்றுவதன் பொருட்டும் இது நிர்மாணிக்கப்படுகிறது.

கொடிமரமானது 33 கணுக்கள் கொண்டதாக அமைதல் நன்று. இதன் உயரமானது விமான உயரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும். இக்கொடிமரத்தைச் சுற்றி கருங்கல்லால் உபபீடம், அதிஷ்டானம்போன்றசோபை தரக்கூடிய வர்க்கங்களை அமைத்து உறுதி செய்தல் வேண்டும். அந்தந்த மூலமூர்த்தியின் வாகனத்தை கொடி மரத்தின் உச்சியில் அமைப்பது உண்டு.

கோபுரம்

கோபுர தரிசனம் கடவுள் பாததரிசனம் என்று கூறுவார்கள். கோபுரங்கள் 3 நிலை முதல் 16 நிலைகல் வரை அமைப்பதுண்டு. இக்கோபுரத்தின் அளவு, மூலதான அளவின் அடிப்படையில்

அமைக்கப்படும்.மேலும் கோபுரத்தின் உச்சியில் அமைக்கப்படும் தூபி என்கின்ற கலசமானது 5.7.9 போன்ற எண்ணிக்கை கொண்டதாக அமைதல் நன்று.

கோபுரத்தின் ஒவ்வொரு பிரகாரத்தைலும் ஒவ்வொரு பெயர் கொண்டு கோபுரத்தை அமைப்பர். முதல் பிரகாரத்திற்கு துவாரசோபை என்றும், இரண்டாவது பிரகாரத்திற்கு துவார சாலை என்றும் மூன்றாவது பிரகாரத்திற்கு துவார பிராசாதம் என்றும் நான்காவது பிரகாரத்திற்கு துவார ஹர்மியம் என்றும் ஐந்தாவது பிரகாரத்திற்கு துவார கோபுரம் என்ற பெயர் கொண்டு அழைப்பர்.

இந்த கோபுரத்தில் அமையும் சிற்பங்கள் அனைத்தும் மூலமூர்த்தியின் அவதாரங்களை உணர்த்துவதன் பொருட்டும் அம்மூர்த்தியின் புராணங்களை விளக்குவனவாகும். திகாமூர்த்தியின் அவதாரங்களை விளக்குவனவாயும் சிற்பங்கள் அமைக்கப்படும்.

**திருமதில்**

பிரகாரத்தை சுற்றி கோயிலின் பாதுகாப்பிற்காக மதில் சுவர் அமைக்கப் படுகின்றது. இம்மதிலின் உயரமானது கோபுரத்தின் குடை வரை செய்தல் வேண்டும்.

இதில் காணும் அங்கங்கள் அனைத்தும் ஒருங்கே
பெற்றதுதான் முழுமையான ஆலயமாகும்.

மலேசியாவில் பேராக் மாநிலத்தில், பேரால் ஆற்றின் அருகில், கோலபேராக்தோட்டத்தில் ஸ்ரீ இராமர் ஆலயம் பத்து ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயம் மூன்று பிரிவுகளாக கட்ட தீர்மானித்து அதில் முதல் பிரிவாக கருவறை, அர்த்த மண்டபம், விமானம், மகா மண்டபம், கோபுரம், கருடன் சன்னிதி, பலிபீடம் இவை அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆலயத்திற்கு மதிப்பிற்குரிய துன் வீ. தி. சம்பந்தன் அவர்களால் 1977ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சிலான்யாசம் என்னும் அஸ்திவாரம் போடப்பட்டது. கருவறைக்கு மட்டும் 120 அடி ஆழம் சிமிண்ட் கான்கிரீட்தூண்கல் அடிக்கப்பட்டும், 80 அடி ஆழம் கான்கிரீட் தூண்கள் மண்டபத்திற்கும் அடிக்கப்பட்டுள்லது.

இக்கோயிலானது கிழக்குத் திசை நோக்கி அமைந்துள்ளது. மூலஹர்மியத்தில் ஸ்ரீ இராமர், சிதை, இலக்ஷ்மனர், ஆஞ்நேயர் ஆகிய முர்த்திகள் அமைக்கப்பட்டும், எதிரில் கருடனும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் ஆனது முழு அமைப்பில் கருவறை, அந்தராளம், அர்த்தமண்டபம், விமானம், மகா மண்டபம், கோபுரம், கருடன் சன்னிதி, துவஜஸ்தம்பம், பலிபீடம், இராமாயண சித்திரகூட மண்டபம் ஸ்ரீ ஆஞ்சநேயர் சன்னிதி, ஸ்ரீ இலக்ஷ்மணர் சன்னிதி, வசந்த மண்டபம், உற்சவ மண்டபம், இராஜகோபுரம், மடப்பள்ளி, திருமதிள், ஸ்ரீ விநாயகர் ஆலயம், தோரணவாயில் இவை அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றவை இராமர் கோாயில் ஆகும்.

இவ்வாலயத்தில் செய்யப்பட்ட அலங்காரவேலைகள் அனைத்தும் புதுமையான தொழில் நுட்பத்தோடு செய்யப் பட்டது ஆகும். இதுவரையில் இந்த வித புதுமை எந்த திருப்பணியிலும் செய்யப்படவில்லை என்பது உண்மையாகும்..

கருவறையின் அகலம் 45 தேவாங்குலம் ஆகும் (14.6 1/4) இக்கருவறையானது அலங்காரவேலைகளுடன் அமையப் பெற்ற அதிஷ்டானமும், அதன்மேல் பாதத்தில் அலங்காரவேலைபாடுகளுடன்கூடிய முழுக்கால் முகபத்திர வேலையும் தேவகோஷ்டமும் அமையப் பெற்றது.

தேவகோஷ்டத்தில் முறையே அச்சுதன், அனிநிருத்தன், அனந்தன் ஆகியமூர்த்திகள் கருங்கல்லினால் செய்து

பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பாதத்தின்மேல் பாகத்தில் பிரஸ்திரத்தில் அழகிய வர்கங்களுடன் அமையப்பெற்றதாகும்.மேற்கண்ட பிரஸ்திரத்தில் அழகிய வர்க்கங்களுடன் அமையப்பெற்றதாகும்.மேற்கண்ட பிரஸ்திரத்தில் தொங்கு தாமமும் , சிறுபத்மமும் அழகிய அலுங்குகளுடன்,கூடுகளும் கருக்குகளுடன் அழகுடன் அமையப்பெற்ற கபோதகமும், அதன்மேல் விமானங்களுடன்கூடிய வியாளவரியும் அமையப் பெற்றதாகும்.

இக்கருவயோடு இணந்த அந்தரானமும், அர்த்த மண்டபமும் இனைந்துள்ளது.

அர்த்த மழ்ண்டபத்தின் முகப்பில் அழகிய கருக்குவேலைபாடுகலோடு கூடிய வாசல் கருங்கல் நிலைக்கால்களும், அவற்றில்பொருத்தப்பட்டகதவுகளில்,ப்த்துப்பத்திகளில்தசாவதாரங்கள்செய்துபொருத்தப்பட்டுள்ளது. மேற்கூறி